செய்தி வெளியீடு *நாள்: 9.7.2025*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 4.12.2024 அன்று அரசு ஸ்டான்லி மருத்துவமனை சாலை அருகில் தொடங்கி வைக்கப்பட்டு 776 புதிய குடியிருப்புகள் கட்டப்பட்டு வரும் பணிகளில் 6 மாதங்களிலேயே, 8 மாடிகள் (G+9) கொண்ட கட்டிடம் நிறைவடைந்து விட்டது.

வருகிற 2025 டிசம்பர் மாதம் இறுதிக்குள் அல்லது 2026 பொங்கல் திருநாளுக்குள் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள மக்களுக்கு வழங்கப்படும்.

மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்;

*****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 4.12.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்ட வடசென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகளான சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனை அருகில் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் 776 புதிய குடியிருப்புகளுக்கான பணிகளை துரிதப்படுத்தும் வகையில் இன்று (9.7.2025) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு களஆய்வு செய்தார்.

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

வடசென்னை வளர்ச்சி திட்ட விரிவாக்கப் பணிகளை **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** கடந்த 2024 டிசம்பர் 4ஆம் தேதி தொடங்கி வைத்து, வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ், சாலை ஓரம் மற்றும் கால்வாய் ஓரங்களில் வசிக்கும் மக்களுக்கு நிரந்தர வாழ்வாதாரத்திற்காக சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனை அருகில் சி.எம்.டி.ஏ. சார்பில் 776 குடியிருப்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன. சுமார் 3.16 ஏக்கர் நிலப்பரப்பில், ஒவ்வொரு வீடும் 425 சதுர அடியில் கட்டப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எங்களது உயிரினும் மேலான அன்பு தலைவர் அவர்களின் ஆட்சியின் சாட்சி போலவே, மிக விரைவாகவே இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. திட்டம் தொடங்கி 6 மாதங்களிலேயே, எட்டு மாடிகள் (G+9) கொண்ட கட்டிடம் பெரும்பாலும் நிறைவடைந்து விட்டது. இந்த 776 வீடுகளும், வருகிற 2025 டிசம்பர் மாதம் இறுதிக்குள் அல்லது அதனைத் தொடர்ந்து வரும் பொங்கல் திருநாளுக்குள் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள மக்களுக்கு வழங்கப்படும்.

இந்த முன்னேற்றம், துறையின் செயலாளர் அன்பிற்கினிய திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., முதன்மைச் செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., முன்னாள் சி.எம்.டி.ஏ., உறுப்பினர் செயலாளர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., ஆகியோரின் ஒருங்கிணைந்த முயற்சியின் விளைவு. 350க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தினமும் பணியாற்றி இந்த கட்டிடங்கள் வேகமாக கட்டப்பட்டு வருகின்றன. இது, திராவிட மாடல் ஆட்சியின் மாற்றத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு எனக் கூறலாம்.

இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர் திரு.ஸ்ரீராமலு, சிஎம்டிஏ. தலைமை திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, தலைமைப் பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர் திரு.ராஜமகேஷ்குமார், மாநகராட்சி செயற்பொறியாளர் திரு.லோகேஸ்வர், மாமன்ற உறுப்பினர் திரு.நவீன் தாஹா, மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.